RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-358 | 25 டிசம்பர் | புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## பெரியாரின் உண்மையான சமூகநீதிப் பாதையில் பயணிக்க உறுதியேற்போம்: தவெக தலைவர் விஜய்

சென்னை, டிச.25

"அறிவார்ந்த, சமத்துவச் சமுதாயம் அமைக்க, தந்தை பெரியார் வழிகாட்டிய உண்மையான சமூக நீதிப் பாதையில் பயணிக்க அனைவரும் உறுதியேற்போம்" என்று தவெக தலைவர் விஜய் கூறியுள்ளார்.



தந்தை பெரியாரின் 51ம் ஆண்டு நினைவு நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது. இதையொட்டி, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வருகின்றனர். இந்நிலையில், தவெக தலைவர் விஜய் தனது எக்ஸ் தளப் பக்கத்தில், "சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை அகற்றி, சமத்துவம் மலர, பெண்களுக்குச் சமஉரிமை கிடைக்க வாழ்நாள் முழுவதும் பெரும்பாடு பட்ட சுயமரியாதைச் சுடர் எங்கள் கொள்கைத் தலைவர் தந்தை பெரியாரின் 51வது நினைவு தினத்தையொட்டி, எமது அலுவலகத்தில் அவரது திருவுருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினேன்.

அறிவார்ந்த, சமத்துவச் சமுதாயம் அமைக்க, தந்தை பெரியார் வழிகாட்டிய உண்மையான சமூக நீதிப் பாதையில் பயணிக்க அனைவரும் உறுதியேற்போம்" என்று கூறியுள்ளார்.

## 'ஹனியே, நஸ்ரல்லாவை கொன்றோம்; ஹமாஸ், ஹிஸ்புல்லாவை வீழ்த்திவிட்டோம்' இஸ்ரேல்

டெல் அவிவ், டிச.25

ஹனியே, நஸ்ரல்லாவை கொன்றோம்; ஹமாஸ், ஹிஸ்புல்லாக்களை வீழ்த்திவிட்டோம் என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் தெரிவித்துள்ளார்.



கடந்த 2023ஆம் ஆண்டு அக்டோபர் 7 அன்று இஸ்ரேல் காசா ஆகிய இரு நாடுகளில் இருந்து ஒலிக்கத் தொடங்கிய போர் சத்தம் இன்று வரை ஓயவில்லை. இரண்டு நாடுகளின் அதிகார மையங்களுக்கு மத்தியில் பொது மக்கள், குழந்தைகள், பெண்கள் தங்களது இன்னுயிரை துறந்து வருகின்றனர்.

ஆனால், இன்னும் போரின் உக்கிரம் குறைந்தபாடில்லை. ஹமாஸை அழிக்காமல் ஓயமாட்டோம் என இஸ்ரேல் வீர முழக்கமிட்டு வருகிறது. இஸ்ரேல் தாக்குதலில் இதுவரை 45,220க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

காசாவில் ஹமாஸ்களுக்கு எதிராக தொடங்கிய போரை இஸ்ரேல் அப்படியே மத்திய கிழக்கு முழுவதும் விரிவடையச் செய்தது. லெபனானில் ஹிஸ்புல்லாக்கள், ஏமனின் ஹவுத்திகள் என்று தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தியது.

இந்நிலையில் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் அளித்துள்ள பேட்டியில், "ஹவுத்திகள் இஸ்ரேலை நோக்கி ஏவுகணைகளை செலுத்தும் இந்த நாளில் நான் சில விஷயங்களை தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாங்கள் ஹமாஸ்களை, ஹிஸ்புல்லாக்களை வீழ்த்தி விட்டோம். ஹனியே, நஸ்ரல்லாவை கொன்றோம்; ஹமாஸ், ஹிஸ்புல்லாக்களை வீழ்த்தி விட்டோம். இன்னும் அந்த அமைப்புகளின் தலைவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் தலையைத் துண்டிப்போம்.

ஈரானின் பாதுகாப்பு அமைப்புகளை ஒடுக்கிவிட்டோம். சிரியாவில் ஆசாத் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டோம். தீவிரவாத அச்ச ரேகைக்கு பெரிய அடி கொடுத்துள்ளோம். அதேபோல் ஏமனில் உள்ள ஹவுத்திகளுக்கு கடுமையான பதிலடி கொடுப்போம். ஹவுத்திகளின் உட்கட்டமைப்பு உத்திகளை தவிடு பொடியாக்குவோம். செங்கடலில் சரக்கு கப்பல்களுக்கு அவர்கள் ஏற்படுத்தும் அச்சுறுத்தல்களை முறியடிப்போம். பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக செயல்பட்டு அவர்கள் இஸ்ரேலுக்கு நெருக்கடி தருகிறார்கள்." என்று கூறியுள்ளார்.

முன்னதாக கடந்த ஜூலை மாதம் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டார். ஈரான் புதிய அதிபர் பதவியேற்பு விழாவில் பங்கேற்கச் சென்ற அவர் இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்டார். ஹனியே கடந்த 1987 ஆம் ஆண்டு ஹமாஸ் படையில் இணைந்தார். இஸ்ரேலுக்கு எதிரான முதல் புரட்சியில் அவர் பங்கேற்றார். 1993 வரை நடந்த அந்த மோதலில் அவர் முக்கியப் பங்காற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

லெபனான் நாட்டில் கடந்த 1985ம் ஆண்டில் ஹிஸ்புல்லா அமைப்பு தொடங்கப்பட்டது. இந்த அமைப்புக்கு ஈரானும் சிரியாவும் ஆயுத உதவி, நிதியுதவி அளித்தன. இரு நாடுகளின் உதவியால் ஹிஸ்புல்லா குறுகிய காலத்தில் வளர்ச்சி அடைந்தது. கடந்த 2006ம் ஆண்டில் ஹிஸ்புல்லாவுக்கும் இஸ்ரேல் ராணுவத்துக்கும் இடையே 34 நாட்கள் போர் நடைபெற்றது. அப்போது ஐ.நா. சபை தலையிட்டதால் போருக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

ஈரான், சிரியாவின் ஆதரவுடன் ஹிஸ்புல்லா மீண்டும் தலை தூக்கியது. அந்த அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா, லெபனானின் ரகசிய இடங்களில் தலைமறைவாக வாழ்ந்து வந்தார். ஈரானின் மூத்த தலைவர்கள், ஹிஸ்புல்லாவின் மூத்த தலைவர்களுக்கு மட்டுமே அவரின் இருப்பிடம் தெரியும். இந்நிலையில் கடந்த செப்டம்பர் மாதம் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டார்.

தொடர்ந்து கடந்த அக்டோபர் மாதம், காசாவில் நடத்தப்பட்ட ராணுவ நடவடிக்கையில் ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வரும் கொல்லப்பட்டார்.

இவற்றையெல்லாம் பட்டியலிட்டே தற்போது இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் தீவிரவாதத்தை ஒழித்து வருவதாகப் பேசியுள்ளார்.

## கருணாநிதி பொற்கிழி விருது: அருணன், நெல்லை ஜெயந்தா உட்பட 6 பேருக்கு அறிவிப்பு

சென்னை, டிச.25

பேராசிரியர் அருணன், கவிஞர் நெல்லை ஜெயந்தா உள்ளிட்ட 6 பேருக்கு பபாசி கருணாநிதி பொற்கிழி விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. வரும் 27ம் தேதி நடைபெறும் சென்னை புத்தக காட்சி தொடக்க விழாவில் இந்த விருதுகளை துணை முதல்வர் உதயநிதி வழங்குகிறார்.




இதுதொடர்பாக தென்னிந்திய புத்தக விற்பனையாளர், பதிப்பாளர் சங்க (பபாசி) தலைவர் சேது சொக்கலிங்கம், செயலாளர் எஸ்.கே.முருகன் ஆகியோர் சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது:

நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் 48வது சென்னை புத்தக காட்சி வரும் 27ம் தேதி தொடங்குகிறது. அன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறும் விழாவில், புத்தக காட்சியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். பள்ளிக் கல்வி அமைச்சர் அன்பில் மகேஸ் சிறப்புரை நிகழ்த்துகிறார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு. கருணாநிதி பொற்கிழி விருதுக்கு பேராசிரியர் அருணன் (உரைநடை), கவிஞர் நெல்லை ஜெயந்தா (கவிதை), சுரேஷ் குமார் இந்திரஜித் (நாவல்), என்.ஸ்ரீராம் (சிறுகதைகள்), கலை வாணி (நாடகம்), நிர்மால்யா (மொழிபெயர்ப்பு) ஆகிய 6 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த விருது ரூ.1 லட்சம் பரிசுத் தொகை, பாராட்டு சான்றிதழ் ஆகியவற்றை உள்ளடக்கியது.

அதேபோல, பபாசி விருதுக்கு எழுத்தாளர் ஜோதி சுந்தரேசன், பேராசிரியை பர்வீன் சுல்தானா, எழுத்தாளர் சங்கர சரவணன், கவிஞர் ஆலந்தூர் கோ.மோகன ரங்கன் உள்ளிட்டோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த விருதுகளை உதயநிதி வழங்குவார்.

சென்னை புத்தக காட்சி ஜனவரி 12ம் தேதி வரை 17 நாட்கள் நடைபெற உள்ளது. வேலை நாட்களில் பிற்பகல் 2 மணி முதல் இரவு 8.30 மணி வரையும், விடுமுறை நாட்களில் காலை 11 மணி முதல் இரவு 8.30 மணி வரையும் நடைபெறும்.

இதில் மொத்தம் 900 அரங்குகள் இடம்பெறுகின்றன. அனைத்து அரங்குகளிலும் புத்தகங்களுக்கு 10 சதவீத தள்ளுபடி உண்டு. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கூடுதல் தள்ளுபடி வழங்கப்படும். நுழைவு கட்டணம் ரூ.10. மாணவர்ளுக்கு அனுமதி இலவசம்.

நிறைவு விழாவில் உச்ச நீதிமன்ற நீதிபதி ஆர். மகாதேவன் பங்கேற்கிறார்.

## தேசிய மனித உரிமைகள் ஆணைய தலைவர் தேர்வு நடைமுறையில் குறைபாடு: ராகுல், கார்கே கருத்து

புதுடெல்லி, டிச.25

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான செயல்முறை "அடிப்படை குறைபாடு" கொண்டதாகவும், ஒருமித்த கருத்தை எட்டுவதற்குப் பதிலாக 'முன்பே தீர்மானிக்கப்பட்ட' முடிவை அமல்படுத்துவதாகவும் உள்ளது என எதிர்க்கட்சித் தலைவர்களான மல்லிகார்ஜுன கார்கே மற்றும் ராகுல் காந்தி ஆகியோர் தங்கள் எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர்.




தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின்(NHRC) தலைவராக இருந்த நீதிபதி (ஓய்வு) அருண் குமார் மிஸ்ராவின் பதவிக்காலம் ஜூன் 1ம் தேதி முடித்ததில் இருந்து தலைவர் பதவி காலியாக இருந்தது. இந்நிலையில், தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்வுக் குழுக் கூட்டம் டிசம்பர் 18ம் தேதி நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர்களான மல்லிகார்ஜுன கார்கே மற்றும் ராகுல் காந்தி ஆகியோர் தலைவர் பதவிக்கு நீதிபதி ரோஹிண்டன் ஃபாலி நாரிமன் மற்றும் நீதிபதி குட்டியில் மேத்யூ ஜோசப் ஆகியோரின் பெயர்களை முன்மொழிந்தார்கள். உறுப்பினர்கள் பதவிக்கு நீதிபதி எஸ். முரளிதர் மற்றும் நீதிபதி அகில் அப்துல் ஹமீத் குரேஷி ஆகியோரின் பெயர்களை அவர்கள் பரிந்துரை செய்தனர்.

எனினும், ஆலோசனைக் கூட்டத்தின் முடிவில், தேசிய மனித உரிமை ஆணையத்தின் புதிய தலைவராக உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி வி.ராமசுப்பிரமணியன் நியமிக்கப்பட்டார். பிரியங்க் கனூங்கோ மற்றும் நீதிபதி (ஓய்வு) பித்யுத் ரஞ்சன் சாரங்கி ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

இதற்கு மல்லிகார்ஜுன கார்கே மற்றும் ராகுல் காந்தி ஆகியோர் தங்கள் எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர். அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட செயல்முறை 'அடிப்படை குறைபாடு' கொண்டதாக உள்ளது. பரஸ்பர ஆலோசனையை புறக்கணிப்பதாகவும், 'முன்பே தீர்மானிக்கப்பட்ட' முடிவை செயல்படுத்துவதாகவும் உள்ளது.

இது தேர்வுக் குழுவின் நம்பகத்தன்மைக்கு முக்கியமாக அதன் நேர்மை மற்றும் பாரபட்சமற்ற தன்மையை குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது. விவாதத்தை ஊக்குவிப்பதற்கும், ஒரு கூட்டு முடிவை உறுதி செய்வதற்கும் பதிலாக குழுவானது, ஆலோசனைக் கூட்டத்தில் எழுப்பப்பட்ட நியாயமான கவலைகளைப் புறக்கணித்து பெயர்களை இறுதி செய்ய, அதன் பெரும்பான்மையை மட்டுமே நம்பியிருந்தது.

நீதியரசர் முரளிதர், காவலர் வன்முறை மற்றும் சிவில் உரிமைகளைப் பாதுகாத்தல் உள்ளிட்ட சமூக நீதியை முன்னேற்றும் அவரது முக்கிய தீர்ப்புகளுக்காக பரவலாக மதிக்கப்படுகிறார். மேலும், முஸ்லிம் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த நீதிபதி குரேஷி, அரசியலமைப்பு கொள்கைகளை தொடர்ந்து பாதுகாத்து, பொறுப்புக்கூறலுக்கான வலுவான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி உள்ளார்.

அவர்களைச் சேர்ப்பது NHRCஇன் செயல்திறன் மற்றும் பன்முகத்தன்மைக்கான அதன் அர்ப்பணிப்புக்கு பங்களிக்கும். தகுதி மறுக்க முடியாத முதன்மை அளவுகோலாக இருந்தாலும், நாட்டின் பிராந்திய, சாதி, சமூகம் மற்றும் மத பன்முகத்தன்மையை பிரதிபலிக்கும் சமநிலையை பராமரிப்பது சமமாக முக்கியமானது.

இந்த முக்கியமான கொள்கையை புறக்கணிப்பதன் மூலம், இந்த மதிப்பிற்குரிய நிறுவனத்தில் பொது நம்பிக்கையை கமிட்டி சிதைக்கும் அபாயம் உள்ளது. இந்த பரிசீலனையை, தேர்வுக் குழு நிராகரித்திருப்பது ஆழ்ந்த வருந்தத்தக்கது. அவர்கள் நிராகரிக்கப்பட்டிருப்பது தேர்வு செயல்முறையின் பாரபட்சமற்ற தன்மை மற்றும் நேர்மை பற்றிய குறிப்பிடத்தக்க கவலைகளை எழுப்புகிறது." என்று தெரிவித்துள்ளனர்.

NHRC சட்டத்தின்படி, NHRC தலைவரை தேர்ந்தெடுக்கும் பிரதமர் தலைமையிலான குழுவில், மக்களவை சபாநாயகர், உள்துறை அமைச்சர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மாநிலங்களவை துணைத் தலைவர் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

## "திராவிட மாடல் குறித்து கேலி பேசுவோருக்கு பெரியாரின் கைத்தடி ஒன்றே போதும்" முதல்வர் ஸ்டாலின்

சென்னை, டிச.25

"திராவிட மாடல் என்ன? என்று கேலி செய்து கொண்டிருப்போருக்கு தந்தை பெரியாரின் கைத்தடி ஒன்றே போதும். பெரியாரை உலகமயமாக்கி, உலகத்தின் பொது சொத்தாக கொண்டு சேர்த்திருக்கிறோம்." என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.




தந்தை பெரியாரின் 51ம் ஆண்டு நினைவு நாளையொட்டி, வேப்பேரியில் உள்ள தந்தை பெரியார் திடலில் புதிதாக கட்டப்பட்டுள்ள டிஜிட்டல் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார். அப்போது, முதல்வருக்கு தந்தை பெரியாரின் கைத்தடி நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது.

இந்த விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: "என்ன பேசுவதென்று புரியாமல் நான் விழித்துக் கொண்டிருக்கிறேன். ஆசிரியர் வீரமணி அளித்துள்ள அந்தப் பரிசை வாங்குகிற போது, என்னையே நான் மறந்திருக்கிறேன். வாழ்க்கையில் எத்தனையோ பரிசுகளை நான் பெற்றிருக்கலாம், எனக்கு வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால், இந்த பரிசுக்கு எதுவும் ஈடாகாது. போதும், எனக்கு இது போதும். திராவிட மாடல் என்ன? என்று கேலி செய்து கொண்டிருப்போருக்கு இந்த கைத்தடி ஒன்றே போதும்.

நான் தாய் வீட்டுக்கு வந்திருக்கிறேன். தாய் வீட்டுக்கு வருகிற போதெல்லாம் நான் உணர்ச்சி, எழுச்சியைப் பெறுவதுண்டு. அதைப்பெற்று நான் இன்றைக்கு உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன். ஆண்டாண்டு காலமாக ஒடுக்கப்பட்ட தமிழினம் ஒற்றுமைப் பெறவும், சுயமரியாதையைப் பெற்று மேலெழுந்து நிற்கவும், தன்னுடைய வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு பல்வேறு தியாகங்களைப் புரிந்து நம் இனதுக்காக அயராது உழைத்த பெரியாரின் நினைவுநாள் இன்று.

அவருடைய கருத்துகளை, எண்ணங்களை, போராட்டங்களை, தியாகங்களை, வாழ்க்கை வரலாற்றை நம் இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்கிற வகையில் டிஜிட்டல் நூலகமாக ஆய்வு மையம் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. தந்தை பெரியார் தனது பயணத்தை முடித்துக் கொண்டார். நாம் தொடர்வோம் என்று மறைந்த முதல்வர் கருணாநிதி கூறினார். பெரியாரின் தொண்டர்களாகிய நாம் அந்த பயணத்தை தொடங்கி, இந்த முன்னெடுப்புகளைச் செய்திருக்கிறோம்.

அவர் வாழ்ந்த காலத்தில், அவர் பேசிய முற்போக்கு கருத்துகளுக்காக, மானுட சமுதாயத்தின் விடுதலைக்கான கருத்துகளுக்காக பழமைவாதிகள் மற்றும் பிற்போக்குவாதிகளிடமிருந்து கடுமையான எதிர்ப்பை அவர் சந்தித்தார். ஊருக்குள் வருவதற்கு தடை, பேசுவதற்கு தடை, கோயிலுக்குள் நுழையத் தடை, எழுதுவதற்கு தடை, பத்திரிகை நடத்த தடை, போராட்டம் நடத்த தடை, அத்தனை தடைகளையும் உடைத்து அவர் நம்மை வீதிகளில் மட்டும் நுழைய விடவில்லை. இந்த மண்ணுலகில் வாழக்கூடிய அத்தனை பேரின் மனதிலும் அவர் நுழைந்திருக்கிறார்.

அதனால்தான், தந்தை பெரியார் இறந்து 50 ஆண்டுகளுக்குப் பிறகும், இன்றும் அவரைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். அதுதான் அவருடைய தனித்தன்மை. பெரியாரின் கருத்துகளை இன்றுவரை அனைத்து மக்களிடமும் கொண்டு சேர்த்து, என்றென்றும் வாழ்கிறார் பெரியார் என்ற நிலையை உருவாக்கியவர் ஆசிரியர் கி.வீரமணி. பெரியாரை உலகமயமாக்கி, உலகத்தின் பொது சொத்தாக கொண்டு சேர்த்திருக்கிறோம்" என்று முதல்வர் பேசினார்.

முன்னதாக, அண்ணா சாலையில் உள்ள தந்தை பெரியாரின் உருவச்சிலைக்கு கீழ் வைக்கப்பட்டிருந்த அவரது உருவப் படத்துக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர்தூவி செலுத்தினார். அமைச்சர்கள், எம்.பி.க்கள் உள்ளாட்சி பிரதிநிகள், கட்சியினர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## விமான தாமதம், ரத்துக்கு இழப்பீடு தருவதாக மோசடி

சென்னை, டிச.25

சென்னை விமான நிலையத்தில் மோசமான வானிலையால் விமானங்கள் தாமதம், ரத்து போன்ற நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.




இதை பயன்படுத்தி சிலர், பாதிக்கப்பட்ட விமானப் பயணிகளிடம் செல்போனில் தொடர்பு கொண்டு, தங்களை இந்திய விமான நிலைய ஆணையத்தின் அதிகாரிகள் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு. "உங்களுடைய விமானப் பயணம் தாமதம் அல்லது ரத்து போன்றவற்றுக்கு இழப்பீடு கொடுக்க முடிவு செய்திருக்கிறோம். நீங்கள் உங்களுடைய பயண விவரங்கள், ஆதார், பான் எண்கள், வங்கிக் கணக்கு விவரங்களை கொடுக்க வேண்டும்" என்று கேட்டு பெற்று பண மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதனால், சென்னை விமான நிலைய நிர்வாகம், பயணிகளை எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளது. இந்திய விமான நிலைய ஆணையத்தின் சென்னை விமான நிலைய அதிகாரிகள் எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது:

இந்திய விமான நிலைய ஆணையத்தின் பெயரை பயன்படுத்தி, விமானங்கள் தாமதம் மற்றும் ரத்துக்கு தகுந்த இழப்பீட்டுத் தொகையை கொடுக்கப் போவதாக, போலியான செல்போன் அழைப்புகள் மூலம் பயணிகளை ஏமாற்றி வருகின்றனர். அதற்கும் இந்திய விமான நிலைய ஆணையத்துக்கும் எந்த தொடர்பும் கிடையாது. இழப்பீடு கொடுக்கும் திட்டமும் இல்லை. எனவே, அத்தகைய தகவல்களை பயணிகள் நம்ப வேண்டாம். தேவையெனில் பயணிகள் விமான நிறுவனத்தை தொடர்பு கொண்டு விவரங்களை கேட்டறியலாம்.

போலி தொலைபேசி அழைப்புகள் வந்தால், உடனடியாக, உள்ளூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்க வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.




கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் வட்டம் சௌந்தரவல்லி பாளையம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் பதினோராம் வகுப்பு மாணவி கயல்விழி தமிழ்நாடு அரசு நடத்திய தமிழ் மொழி திறனறிவு தேர்வில் வெற்றி பெற்றதை பாராட்டு விழா தலைமை ஆசிரியை முல்லை மணி முன்னிலையில் தேவபாண்டலம் கார் குழலி அறக்கட்டளை சார்பில் நிறுவனர் இராசு தாமோதரன் செயலாளர் தா வசந்தா சங்கராபுரம் ஜெய் பிரதர்ஸ் நிறுவனர் கபாடி விஜயகுமார் தமிழ் படைப்பாளர்கள் சங்க இணை செயலாளர் சக்திவேல் முதுகலை தமிழ் ஆசிரியர் முனைவர் இளையராஜா ஆசிரியர்கள் பிரகாஷ் அசோகன் ஆரோக்கிய லூர்து ராஜ் சுரேஷ் சின்னதுரை உடன் இருந்து சிறப்பித்தனர்.

# தமிழ்நாடு முழுவதும் ரூ.99.68 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை தமிழக முதல்வர் காணொலி காட்சியில் திறந்து வைப்பு

வேலூர், டிச.25

வேலூர் மாவட்டம். தமிழ்நாடு தலைநகரம் சென்னை, தலைமைச் செயலகத்தில், ஊரகவளர்ச்சிமற்றும் ஊராட்சித் துறை சார்பில் தமிழ்நாட்டின் 21 மாவட்டங்களில் 64 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 400 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 6 மாவட்டங்களில் 35 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், என மொத்தம் 99 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி காண்பித்து ரிமோட் மூலம் திறந்து வைத்தார்.




இந்நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தலைமைச் செயலாளர் முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச்செயலாளர் ககன்தீப் சிங்பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

# வீரபாண்டியில் அகில பாரத ஐயப்பா சேவா சங்கம் சார்பில் பொது பஜனை மற்றும் அன்னதானம் வழங்குதல்

தேனி, டிச.25

தேனி மாவட்டம் வீரபாண்டி வேளாளர் உறவின்முறை திருமண மண்டபத்தில் அகில பாரத ஐயப்ப சேவா சங்கம் சார்பில் பொது பஜனை மற்றும் 16 ஆண்டாக அன்னதானம் வழங்கும் விழா நடைபெற்றது. நிகழ்வில் அகில பாரத ஐயப்ப சேவா சங்க தேனி மாவட்ட தலைவர் பெருமாள்,மாவட்ட செயலாளர் ரமேஷ்,பொருளாளர் பாரி,முகாம் அலுவலர் ஆர்த்திக் குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் மாவட்ட துணைத் தலைவர் மகேஸ்வரன் தலைமையில் பஜனை பாடப்பட்டது.



பஜனையில் பாடிய சிறந்த பக்தர்களுக்கு சங்கத்தின் சார்பில் பாராட்டு சான்றிதழ் வழங்கினர்.சங்க நிர்வாகிகள் கூறும்போது "எங்களது சங்கத்தின் மூலம் வீரபாண்டியில் தொடர்ந்து 16 ஆண்டுகளாக பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி வருகிறோம்.

அதேபோல் சபரிமலையில் அகில பாரத சேவா சங்கம் மற்றும் தேவசம் போர்டுடன் இணைந்து கடந்து 78 ஆண்டுகளாக செய்து வந்த அனைத்து சேவைகளையும் தொடர்ந்து சேவை செய்ய அனுமதி வழங்க வேண்டும் " என்று கோரிக்கையாக வைத்தனர்.

# ஈஞ்சம்பாக்கத்தில் உதயநிதியின் உதய நாள் விழா 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல் பொதுக்கூட்டம்

ஈஞ்சம்பாக்கம் டிச.25

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 1000ற்கும் மேற்பட்டோருக்கு ஹாட் பாக்ஸ், பட்டுப் புடவைகள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் பொதுக் கூட்டம், 22.12.2024. ஞாயிற்றுக்கிழமை மாலை 6:00 மணிக்கு, கஸ்தூரிபாய் நகர், வாட்டர் டேங்க், வெட்டுவாங்கேணி, சென்னை600115. சிறப்பாக நடைபெற்றது.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த் ரமேஷ் ஆலோசனைப்படி, இவ்விழாவை சென்னை தெற்கு மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் 194 வது வட்ட செயலாளருமான ஆர்.எம். கார்த்திகேயன் தலைமை வகித்தார்.




விழாவில் 15வது மண்டல குழு தலைவர், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி செயலாளருமான வி. இ .மதியழகன் மற்றும் 194வது வார்டு மாமன்ற உறுப்பினர் விமலா கர்ணா முன்னிலை வகித்தார். நடைபெற்ற நிகழ்ச்சியில் வரவேற்புரையாக 194 வது வட்ட செயலாளர், குங்பூ மாஸ்டர். எஸ்.கர்ணா, மா.மீ.அ.து அமைப்பாளர், சி.எம்.சேகர், மா.இலா.அ.து. அமைப்பாளர், கே.ரகுநாதன், பகுதி பிரதிநிதி, எல்.பாலாஜி, ப.ஆ.தி.ந.கு.அமைப்பாளர், எஸ். சத்தியசீலன், வட்ட செயற்குழு உறுப்பினர் டீ.வி. கோபிநாத், இளைஞர் அணி, எஸ். நரேந்திரன், வட்ட கழக நிர்வாகிகள்: அவைத்தலைவர், ஆர்.சங்கர், பகுதி பிரதிநிதி, கே.ராஜசேகர், அவைத் தலைவர், இளையபெருமாள், பகுதிபிரதிநிதி, சு.வெங்கடேசன் மற்றும் தலைமைக் கழக பேச்சாளர்கள் கோமல் விஜய் அறிவழகன், க.ரா.சந்தியா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர், பாலவாக்கம். மு. மனோகரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர், ஆ. அரிகிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், கா.வீ. தியாகராஜன் மற்றும் சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழகச் செயலாளர்கள்: பகுதி துணைச் செயலாளர், ஜி. விஜயகுமார், பகுதி பொருளாளர், எம். பாஸ்கரன் உள்ளிட்ட 194வது வட்ட தி.மு.க.சோழிங்கநல்லூர் சென்னை தெற்கு மாவட்ட, வட்ட, பகுதி, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

# பேருந்தில் மின்வயர் உரசி மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி ஓம்சக்தி பக்தை பலி

இராணி பேட்டை டிச.25

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு தாலுகா, முப்பதுவெட்டி ஊராட்சி எல்லைக்குட்பட்ட முப்பதுவெட்டி நெடுஞ்சாலை ஓரம், ஆற்காடு மேல் மருவத்தூர் ஓம்சக்தி பக்தர்கள் சுற்றுலா பஸ் சென்றது.

அகல்யா உள்பட அப்பகுதியைச் சேர்ந்த 52 பேர் மாலை அணிந்து ஓம் சக்தி மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோயிலுக்கு பஸ்ஸில் 21ம் தேதி சனிக்கிழமை இந்த பக்தர்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர். இந்த சுற்றுலா பேருந்து ஆற்காடு அடுத்த முப்பதுவெட்டி பகுதியில் உள்ள டீக்கடை அருகே சனிகிழமை அதிகாலை 4.15 மணிக்கு நிறுத்தப்பட்டது. பஸ்ஸிலிருந்து டீ குடிக்க கீழே இறங்கியுள்ளனர். பஸ்ஸிலிருந்து அகல்யா கீழே இறங்க இருந்த நிலையில் அங்கு தாழ்வாக இருந்த மின்கம்பி பஸ் மீது உரசி பஸ்ஸின் மீது கைப்பிடி கம்பிகளில் மின்சாரம் பாய்ந்துள்ளது.



இந்த விபத்துக்கு உண்மையான காரணம் ஓட்டுனரின் கவனக்குறைவே என சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். உயிரிழந்த பெண் திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த வெங்கடாபுரம் பகுதியைச் சேர்ந்தவர் சங்கர் என்பவரின் இவரது மகள் அகல்யா (வயது 20) என்பது தெரியவந்தது.

அவரை மீட்டு ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த டாக்டர்கள் அவர் இறந்து விட்டதாக தெரிவித்துள்ளனர்.

அகல்யாவுக்கு அடுத்த மாதம் திருமணம் நடைபெற நிச்சயிக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு நேர்ந்த பரிதாபம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இதுகுறித்து ஆற்காடு காவல் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஜி .சங்கர் தலைமையில் உதயநிதியின் உதயநாள் விழா 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்-பொதுக்கூட்டம்

சோழிங்கநல்லூர் டிச.25

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 199 வது வட்டம், மாலை 5:00 மணிக்கு, உமா மகேஸ்வரி அவென்யூ, காந்தி நகரில் நவம்பர் 27ல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு உதயநிதியின் உதய நாள் விழாவில் திமுக அரசின் சாதனைகளை விளக்கி மகளிர் 1000 திற்கும் மேற்பட்டோருக்கு புடவைகள் நலத்திட்ட உதவிகள் வழங்கி பொதுக்கூட்டம் 199வது வட்ட செயலாளர் , மாமன்ற உறுப்பினருமான ஜி. சங்கர் தலைமையில் நடைபெற்ற விழாவில் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ் திமுக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.




இவ்விழாவில் வரவேற்புரையாக மாவட்ட பிரதிநிதிகள் : கே.ஏழுமலை, எஸ். தயாளன், ஆர். சுரேஷ்பாபு, வட்ட அவைத் தலைவர்,ஈ.பாரி, மற்றும் வட்ட செயலாளர் துணை எஸ்.ஜோதி, வட்டத் துணை செயலாளர் மா. மாரியம்மாள், வட்ட பொருளாளர் மா.கோவிந்தராஜ், பகுதி பிரதிநிதிகள்: ஈ. தயாநிதி, கே .ராஜா , ஆ.சாரங்கபாணி, ரா. ராஜேந்திரன், கே. சம்பத்குமார், செயற்குழு உறுப்பினர்கள்: கே. சுப்பிரமணியன், கே. மைக்கெல்ராஜ், ச.பூபாலன், ரா.விஜய், ச.மாதவன், இ. சங்கர், ஜி. கண்ணபிரான், து. பென்னி, லோ.வேலு தலைமை கழக பேச்சாளர்கள் முரசொலிமூர்த்தி, வெ.ஆர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், த.பொதுக்குழு உறுப்பினர் த.பஷீர், 189 வது மாமன்ற உறுப்பினர் லயன். வ.பாபு, மா.இ.அ.து.அமைப்பாளர் ஜெ. இ.பாண்டியன்,198 வட்டச் செயலாளர் காரப்பாக்கம் பா .தேவகுமார் மற்றும் வி.வி .குமரேசன் மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் : ஜி. சதீஷ்குமார், ஏ.மத்தியாஸ், எம். மஞ்சுளா, த.கலாநிதி ம. ப. அ. அமைப்பாளர்கள்: எம்.சதீஷ்குமார் பா. ராஜ்மோகன், பி.ராஜா, வி. ராஜா, வி. மோகன கிருஷ்ணன், து. முகேஷ், ம.ப.அ. அமைப்பா ளர்கள் மற்றும் வ.அ .நிர்வாகி கள் : வினோத், குமார்,குப்பன், சாரங்கபாணி, ஏழுமலை, கார்த்திக், நடராஜன், ராஜபாண்டி, சுரேஷ், பிரபு, வினோத் குமார், மீனாட்சி சுந்தரம், ஸ்ரீபாதம், தயாநிதி, குணாவதி, ரவிச்சந்திரன், அஜி, விஸ்வநாதன், ஜான், அருண் பிரதாப், முகமது உசேன், முத்து, குமரவேல், தமிழ்ச்செல் வன்,ராஜா, ஐஸ்வர்யா, சதீஷ், கார்த்திக், பார்த்திபன், சுரேஷ், அன்பு, ஆவின் லோகநாதன் நன்றி உரையாக க.ராஜேஷ் குமார், எஸ். பி. ஏழுமலை, வி.மாணிக்கம் உள்ளிட்ட 199வது வட்ட தி. மு.க.சோழிங்கநல்லூர் சென்னை தெற்கு மாவட்ட, வட்ட, பகுதி, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.




சிவகங்கை மாவட்டம் பெரியகோட்டை ஊராட்சி செயலர் முனீஸ்வரன் நேற்று முன்தினம் சாலை விபத்தில் மரணம் அடைந்துவிட்டார்.சாலையை முறையாக பராமரிக்காத ஒப்பந்ததாரரை கைது செய்ய கோரி சிவகங்கை அரசு மருத்துவமனை செல்லும் சாலையில் அரசு ஊழியர்கள் மற்றும் முனீஸ்வரன் உறவினர்கள் சாலை மறியலில் நேற்று ஈடுபட்டனர்.காவல்துறையினர் சாலை மறியலில் ஈடுபட்ட நபர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

# திருவள்ளுவர் சிலை 25வது ஆண்டு நிறைவடைவதையொட்டி நடைபெறவுள்ள வெள்ளி விழா நிகழ்ச்சி குறித்து கன்னியாகுமரி ஆட்சியர் தலைமையில் ஆலோசனை

கன்னியாகுமரி டிச.25

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா. தலைமையில் அய்யன் திருவள்ளுவர் சிலை கன்னியாகுமரி கடலில் நிறுவப்பட்டு 25வது ஆண்டு நிறைவடைவதையொட்டி தமிழ்நாடு அரசு சார்பில் நடைபெறவுள்ள வெள்ளி விழா நிகழ்ச்சியினை வெற்றிகரமாக நடத்துவது குறித்து உள்ளாட்சி பிரதிநிதிகளுடனான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா. உள்ளாட்சி பிரதிநிதிகளிடம் தெரிவிக்கையில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் அயராத முயற்சியால் கடந்த 2000ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி கன்னியாகுமரி கடலில் நிறுவப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலையின் 25வது வெள்ளிவிழா ஆண்டினை சிறப்பாக கொண்டாடும் வகையில் பல்வேறு முன்னெடுப்பு பணிகள் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



குறிப்பாக உலகத்தமிழர்கள் அனைவரும் கொண்டாடும் வகையில் வருகின்ற டிசம்பர் 30, 31 மற்றும் ஜனவரி 12025 ஆகிய மூன்றுநாட்கள் நடை பெறவுள்ள வெள்ளி விழா கொண்டாட்டத்தை வெற்றிகரமாக நடத்திட கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து துறை அலுவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள், பள்ளி கல்வித் துறை ஆசிரியர்கள். தமிழ்ச் சங்கங்கள். தன்னார்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்பாளர்களாக கலந்து கொள்ளவும், அந்தந்த உள்ளாட்சி பகுதிகளிலுள்ள பொது மக்களுக்கு விழா குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு அனைத்து பகுதிகளிலும் விளம்பரங்கள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளும் அந்தந்த பகுதிகளிலுள்ள வட்டார வளர்ச்சி அலுவலர்களுடன் இணைந்து அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் தாங்கள் அனைவரும் தங்கள் குடும்பத்தினருடன் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதோடு, உற்றார் உறவினர்கள் தங்கள் அயலகத்தாரிடமும் அய்யன் திருவள்ளுவரின் சிறப்புகளை எடுத்து கூறி, நிகழ்ச்சியில் பங்குகொள்ள அழைக்க வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா. தெரிவித்தார்.



வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, குடியாத்தம் கோட்டாட்சியர் அலுவலகத்தில், கீ.வ.குப்பம் தாலுகா, துருவம் கிராமத்தில் கடந்த வாரம் சிறுத்தை தாக்கி உயிரிழந்த பட்டதாரி இளம் பெண்ணின் குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்து, உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நிவாரணத் தொகையாக ரூபாய் ஒரு லட்சத்திற்கான ஆணையினை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி மற்றும் வேலூர் எம்.பி. கதிர்ஆனந்த் ஆகியோர் நிவாரணத் தொகை ஆணையை வழங்கினர். இந்நிகழ்வின்போது குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி. சுபலட்சுமி, ஒன்றிய குழு தலைவர் ரவிச்சந்திரன், வட்டாட்சியர் சந்தோஷ்குமார் உட்பட பலர் உடனிருந்தனர்.

## இளையான்குடி அஇஅதிமுக சார்பில் எம்.ஜி.ஆர் நினைவு அஞ்சலி அனுசரிப்பு



இளையான்குடி டிசம25

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பஜாரில் அ.இ.அ.தி.மு.க பேரூர் கழக செயலாளர் எம்.ஏ.நாகூர் மீரா தலைமையில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் இளையான்குடி பேரூர்கழக நிர்வாகிகள் அபுபக்கர், மீரான்கனி, தாஜ் மைதீன், செய்யதுஇபுறாகிம், அபுல்கலாம்ஆசாத்,, அப்துல் காதர், அப்பாஸ்அலி, இபுறாம்சா, ஹைதர்அலி, கலில் அஹமது, பூட்டுஅபுதாகிர், மைதீன், பீர்முகம்மது, போஸ், அப்துல்ரஜாக், அல்லாஹைர், அயூப்கான், திருநாவுக்கரசு, ஆறுமுகம், செய்யது அன்சாரி, சபீர்முகம்மது, ஹம்சாசிக்கந்தர், அன்சாரலி, தெய்வேந்திரன், ராஜேந்திரன், அலிஅக்பர், முகம்மதுபைசல், எல்.முருகன், இஸ்மத்இனூன், நசீர்அகமது, பைசில்ரஹ்மான், ஹாத்திம், முகம்மதுபாசித், ஜாவித், அரசேந்திரன், பாக்கியராஜ், மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.




தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள வடுகபட்டியில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் 37வது நினைவு தினத்தை முன்னிட்டு வடுகபட்டி அஇஅதிமுக பேரூர் கழக செயலாளர் பாலமுருகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மேற்கு ஒன்றிய செயலாளர் அன்னபிரகாஷ், தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜகுரு, தலைமை கழக பேச்சாளர் சுந்தரபாண்டியன், ஒன்றிய அவைத் தலைவர் முத்துச்சாமி, விவசாய அணி பிரிவு செயலாளர் ரத்தினவேல், மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள், பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி திருக்கோவிலூர் மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட மேலத்தாழனூர் ஊராட்சியில் ஓம்சக்திமன்ற குழுவில் உள்ள அனைத்து பக்தர்களுக்கும் சேலை மற்றும் நன்கொடை தொழில் அதிபர். வசந்தம் க.வேலுசாமி வழங்கினார். உடன் திருக்கோவிலூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் (எ ) பூமாரி கிருஷ்ணமூர்த்தி மற்றும். மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் மாவட்ட மகளிரணி நிர்வாகிகள் கிளை கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர். வருடந்தோறும் எங்களுக்கு நன்கொடை வழங்கி வரும் வசந்தம் குடும்பத்தாருக்கு ஊர் பொதுமக்கள் நன்றி தெரிவித்தார்கள்.



தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள தெ.கள்ளிப்பட்டியில் தென்கரை பேரூர் அஇஅதிமுக சார்பில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் 37 ஆம் ஆண்டு நினைவு தின அனுசரிப்பு தென்கரை பேரூர் கழக செயலாளர் ஆண்டவர் தலைமையில் நடந்தது.இந்நிகழ்விற்கு மாநில பொதுக்குழு உறுப்பினர் தவமணி கருப்பசாமி, தாமரைக்குளம் பேரூர் கழக செயலாளர் மனோகரன், வார்டு செயலாளர்கள் பிச்சை, கார்த்திக், ராஜ், சுகுமாறன், பெரியசாமி, வார்டு பிரதிநிதி கருப்பணன், சுக்குலான், முத்து மணி, கிப்பி முருகன், பித்தா நாகராஜ் உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பழனியில் அமமுக நிர்வாகிகள் எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து நினைவு அஞ்சலி



பழனி டிச25

பழனியில் அமமுக நிர்வாகிகள் எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து நினைவு அஞ்சலி செலுத்தினர்.

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆர் 37வது நினைவு தினத்தை முன்னிட்டு பழனி பெரியப்பா நகரில் அமைந்துள்ள எம்ஜிஆர் சிலைக்கு பழனி கிழக்கு ஒன்றிய செயலாளர் தினேஷ்குமார் மேற்கு ஒன்றிய செயலாளர் ரவீந்திரன் பழனி நகர செயலாளர் அறிவழகன் ஆகியோர் தலைமையில் மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் மாவட்ட இலக்கிய அணி செயலாளர் ராஜ். பழனி கிழக்கு ஒன்றிய அவைத் தலைவர் சசிதரன் பிள்ளை. பழனி கிழக்கு ஒன்றிய இளைஞரணி செயலாளர் சிவா. .மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் பெரியராஜ்.பால சமுத்திரம் பேரூர் அம்மா பேரவை செயலாளர் பாலு. . நகர இணை செயலாளர் ஜெயராம். நகர துணைச் செயலாளர். முகமது இஸ்மாயில். கார்த்திக். வார்டு செயலாளர் . மாரிமுத்து. மாசாணம். கஜேந்திரன். சக்திவேல். மாவட்ட பிரதிநிதி மகுடீஸ்வரன். பஞ்சவர்ணம் பழனிச்சாமி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர் மாவட்ட நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் ஒன்றியம் நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பெரும்பச்சேரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி திறப்பு விழா





மானாமதுரை டிச25

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள பெரும்பச்சேரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினால் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைக்கப் பட்டது.

அதனைத் தொடர்ந்து இவ் விழாவில் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் லதா அண்ணாதுரை குத்து விளக்கு ஏற்றி வைத்தார். உடன் ஒன்றிய கவுன்சிலர் அண்ணாதுரை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வீ. சோமதாஸ், லூயிஸ் ஜோசப்பிரகாஷ், வட்டார கல்வி லுவலர் கு.பால்ராஜ் வட்டார கல்வி மைய மேற்பார்வையாளர் ராமையா, ஊராட்சி மன்ற தலைவர் மகேஷ் ராஜசேகரன் ஆகியோர் பங்கேற்றனர்.

விழாவில் பங்கேற்ற அனைவரையும் பள்ளி தலைமை ஆசிரியர் பா. மனோகர் வரவேற்று பொன்னாடை போர்த்தினார். விழாவில் கிராம பொதுமக்களும் மாணவர்களும் பங்கேற்றனர்.

விழா நிறைவில் உதவியாசிரியர் அனைவருக்கும் நன்றி கூறினார். விழா இனிதே நிறைவுற்றது.

## தாமரைக்குளத்தில் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் நினைவு தினம் அனுசரிப்பு





பெரியகுளம் டிச25

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள தாமரைக்குளம் அஇஅதிமுக சார்பில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் 37வது நினைவு தினத்தை முன்னிட்டு தாமரைக் குளம் பேருந்து நிறுத்தத்தில் எம்ஜிஆர் திருவுருவப்படத்திற்கு தாமரைக்குளம் பேரூர் கழக செயலாளர் மனோகரன் தலைமையில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.இந்நிகழ்விற்கு மாநில பொதுக்குழு உறுப்பினர் தவமணி கருப்பசாமி, பேரூர் கழக அவைத் தலைவர் நாராயணன், பொருளாளர் பழனிச்சாமி கழக நிர்வாகிகள் தியாகராஜன், செல்லையா, ராமலிங்கம், ஜெயராமன், அழகேந்திரன், நடராஜன், மயில்வேல், லட்சுமணன், அய்யனார் மற்றும் மற்றும் சென்றாயகிருஷ்ணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். அதேபோல் தாமரைக்குளம் கல்லூரி விலக்கில் தேனி கிழக்கு மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை செயலாளர் அப்பாஸ்மைதீன் தலைமையில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் தாமரைக்குளம் செயலாளர் மனோகரன், என்கிற பேரூர் கழக செயலாளர் ஆண்டவர் உள்பட நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## தாம்பரம் மத்திய பகுதி சார்பில் எம்ஜிஆர் நினைவு நாளை முன்னிட்டு உருவ படத்திற்கு மாலை அணிவித்து அன்னதானம்



தாம்பரம் டிச.25

தாம்பரம் மத்திய பகுதி சார்பில் எம்ஜிஆர் 37ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து அன்னதானம் வழங்கப்பட்டது.

எம்ஜிஆரின் 37ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கழகப் பொதுச் செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் புரட்சித் தமிழர் எடப்பாடியார் ஆணைக் கிணங்க செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தாம்பரம் மாநகர மத்திய பகுதி சார்பில் மத்திய பகுதி கழகச் செயலாளர் எல்.ஆர். செழியன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அமைச்சர் டி.கே.எம். சின்னையா கலந்து கொண்டு திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்து அதனைத் தொடர்ந்து சண்முக சாலையில் இருந்து பேரணியாக சென்று எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து கோஷங்களும் விட்டனர்.

பின்னர் சண்முகம் சாலையில் சுமார் 200க்கும் மேற்பட்டோருக்கு காலை உணவு வழங்கப்பட்டது இதில் பொதுக்குழு உறுப்பினர் துரைவேலு, துணைச் செயலாளர் கஜா, எம்.வேலு, ஏ.கோபிநாத், ஹரிபாபு, துணைச் செயலாளர் தன லட்சுமி, சுலேஷனா, மாவட்ட மாணவரணி இணை செயலாளர் தில்லை ராஜ், வட்ட கழக செயலாளர் பெரியசாமி, சம்பத், ஏசுராஜ், ராஜா, பார்த்தசாரதி, வெங்கடேசன், பாலாஜி, குமணன், சிவா, கேபிள் குணா, எஸ்.நாகராஜ், நாகூர் கனி, மாரி மற்றும் மகளிர் அணியினர் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சிவகங்கையில் HD செட்டாப்பாக்ஸ் சேவையினை பொதுமக்கள் பயன்டுத்திக்கொண்டு பயன்பெற ஆட்சியர் அறிவுறுத்தல்



சிவகங்கை டிச25

சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிர்வாகத்தின் சார்பில்,புதிதாக தொடங்கப்பட்டுள்ள HD செட்டாப்பாக்ஸ் சேவையினை பொதுமக்கள் பயன்டுத்திக்கொண்டு பயன் பெறலாம் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிர்வாகத்தின் சார்பில், புதிதாக தொடங்கப்பட்டுள்ள HD செட்டாப்பாக்ஸ் சேவையினை பொதுமக்களுக்கு வழங்கிடும் பொருட்டு, கடந்த (23.12.2024) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கேபிள் டிவி ஆப்ரேட்டர்களுக்கு HD செட்டாப் பாக்ஸ்களை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் வழங்கி தொடங்கி வைத்தார்.

மேலும், ஒரு புதிய HD செட்டாப் பாக்ஸ் விலை ரூ.500/ எனவும், தற்போது நடைமுறையிலுள்ள மாதாந்திர கட்டணத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதால் பொதுமக்கள் அனைவரும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன செட்டாப்பாக்ஸ்களை பயன்படுத்திக்கொண்டு பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வின் போது, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி துணை மேலாளர் / தனி வட்டாட்சியர் சிவசம்போ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தேனியில் ஆட்சிமொழிச் சட்ட வாரவிழா விழிப்புணர்வு பேரணி நுகர்வோர் விழிப்புணர்வு பேரணியை தொடங்கி வைத்த ஆட்சியர்



தேனி டிச25

தேனி மாவட்டம், பங்களா மேடு பகுதியில் தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் ஆட்சி மொழிச் சட்ட வார விழா விழிப்பு ணர்வு பேரணி மற்றும் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் சார்பில் நுகர்வோர் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் ஆர்.வி. ஷஜீவனா, நேற்று (24.12.2024) துவக்கி வைத்தார்.

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956ஆம் நாளை நினைவுகூரும் வகையில் நிகழாண்டில் ஆட்சிமொழிச் சட்ட வாரம் தேனி மாவட்டத்தில் 18.12.2024 முதல் 27.12.2024 வரை ஒரு வார காலத்திற்கு கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு அனைத்து வணிக நிறுவனங்களின் பெயர் பலகை தமிழில் இருக்க வேண்டும் என அரசாணை வெளியிட்டுள்ளது. அதன்படி, வணிக நிறுவனங்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாகவும், தமிழ் மொழியினை கையாள்வது மற்றும் தாய் மொழியான நம் தமிழ் மொழியில் கையொப்பம் இடுதல் போன்றவை குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பள்ளி, கல்லூரி மாணவர்கள் பங்கு பெற்ற விழிப்பணர்வு பேரணி நடைபெற்றது.

இப்பேரணி பங்களாமேடு பகுதியில் தொடங்கி பழைய பேருந்து நிலையம் வழியாக பெரியகுளம் சாலை பாரத மாநில வங்கி வரை சென்று மீண்டும் நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் ஆய்வு மாளிகையில் பேரணி நிறைவுற்றது.

இப்பேரணியில் 200க்கும் மேற்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள்,அரசுப் பணியாளர்கள், தமிழ் அமைப்புகள், தமிழறிஞர்கள்,கலந்து கொண்டனர். பேரணியில் எங்கும் தமிழ் எதிலும் தமிழ், தனிமொழியானது தமிழே தாய் மொழியானது தமிழே, அறிவிப்பு பலகை எல்லாம் அருந்தமிழ் சொல்லாக்குவோம் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியும், கோசங்கள் எழுப்பியவாறும் மாணவர்கள் பேரணியில் பங்கேற்றனர்.

அதனைத் தொடர்ந்து, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் நுகர்வோர் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பங்களா மேட்டிலிருந்து கன்வென்ட் பள்ளி வரை விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வாறு பேரணியாக சென்றனர். இப்பேரணியில் 250க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

இப்பேரணிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ஜெயபாரதி, தமிழ்வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் பெ. இளங்கோ, மாவட்ட வழங்கல் அலுவலர் மாரிசெல்வி, உதவியாளர் அர்ஜீனன், அரசு அலுவலர்கள் தமிழ் ஆர்வலர்கள், தமிழ் அமைப்புகளை சேர்ந்த உறுப்பினர்கள், மற்றும் மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



சிவகங்கை வடக்கு மாவட்டம் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நேற்று 51வது தந்தை பெரியார் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு காரைக்குடியில் உள்ள அவரது உருவசிலைக்கு அணிவித்து மரியாதை செலுத்தினார் உடன் மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட சார்பு அணியினர் நிர்வாகிகள் மற்றும் காரைக்குடி தொகுதி நிர்வாகிகள் மற்றும் திருப்பத்தூர் தொகுதி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## செங்கல்பட்டு முடிச்சூர் பகுதியில் எம்ஜிஆர் 37ஆம் ஆண்டு நினைவுதினம் அனுஷ்டிப்பு

செங்கல்பட்டு, டிச.25

முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் 37ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அஇஅதிமுக பொதுச் செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் புரட்சித்தமிழர் எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்க செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் டி.கே.எம்.சின்னையா, பரங்கிமலை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.பி.மனோகரன் அவர்களின் ஆலோசனைப்படி முடிச்சூர் பகுதி சார்பில் முடிச்சூர் ஸ்ரீ



பாஸ்கர் ஏற்பாட்டில் ராஜேந்திரன் மூர்த்தி முன்னிலையில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து இனிப்புகள் வழங்கினார்கள் இதில் குரங்கு பாபு, கஜேந்திரன், கணேசன், கலை, கபாலி, ஹரி கிருஷ்ணன், திருமலை, பாக்ய ராஜ், தாஸ், ரமேஷ், சர்குணம், சீனிவாசன் சுவாமி நகர், சிவம், ஈட்டி முருகன், விஜய் கணேஷ், மாரி, கற்பகம் சீனிவாசன், புவனேஸ்வரி, விஜய ராணி, ரீட்டா, சாமந்தி, செல்வம், தீபா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு எம்.ஜி.ஆர் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தனர்.

## தூத்துக்குடி மகிழ்வகம் மகளிர் நம்பிக்கையின் உறைவிடத்தினை திறந்து வைத்த கனிமொழி எம்.பி.,

தூத்துக்குடி டிச.25

தூத்துக்குடி மாவட்டம், டூவிபுரத்தில் உள்ள மாவட்ட மையநூலகத்தில் குமிழ்முனையில்வானுயர்ந்துநிற்கும்அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலை வெள்ளி விழாவை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்கள் வரைந்த திருக்குறள் புகைப்படக் கண்காட்சி மற்றும் மகிழ்வகம் மகளிர் நம்பிக்கையின் உறைவிடத்தினை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் அவர்கள் முன்னிலையில் திறந்து வைத்து பார்வையிட்டார்.



இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தெரிவித்ததாவது:

பல மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், பல இடங்களில் நடந்து கொண்டிருப்பதை, உட்கார்ந்து கொண்டிருப்பதையும், அலைந்துகொண்டிருப்பதையும் நாம் பார்க்கிறோம்.

ஒருவர் மனநிலை பாதிக்கப்பட்டவராக இருக்கிறார் என்ற ஒரே காரணத்திற்காக அவருடைய அத்தனை உரிமைகளையும் நாம் எடுத்துக் கொள்வதற்கு, நமக்கு எந்த தகுதியும் கிடையாது. யாருக்கும் அந்த உரிமையும் கிடையாது. அவர்களுக்கு சிகிச்சை அளித்து அவர்களை குணப்படுத்தி அவர்களது உரிமைகளை அவர்களுக்கு திரும்பி தரக்கூடிய ஒரு காலகட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம்.

இது அனைத்திற்கும் ஒரு மிகப்பெரிய அளவிலே பங்காற்றி கொண்டு இருக்கும். இப்படிபட்ட நிறுவனமான பேனியன். தூத்துக்குடியில் இந்த மகிழ்வகத்தை உருவாக்குவதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து இப்படிபட்ட பல புதிய திட்டங்களை வாக்கு வங்கிக்காக இல்லாமல், தலைவர் கலைஞர் அவர்கள் எப்படி சமூகத்திற்கான திட்டங்களை தொலை நோக்கோடு தந்தார்களோ, அது மாற்றுத்திறனாளியாக இருக்கட்டும் அல்லது மூன்றாம் பாலினம் என்று சொல்லக்கூடிய திருநங்கைகளாக இருக்கட்டும் இவர்களை எல்லாம் அரவனைத்து ஒரு ஆட்சி நடத்தி காட்டினாரே அதேபோல் அவருடைய வழியில் நம்முடைய முதலமைச்சர் மீண்டும் இல்லம் திரும்பக் கூடிய இப்படிபட்ட ஒரு மிகப் பெரிய திட்டத்தை துவக்கி இன்று பல்வேறு நிறுவனங்கள் அதை தன் கையில் எடுத்து மக்களுக்காக சேவை செய்து கொண்டிருக்க கூடிய வாய்ப்பை உருவாக்கி தந்திருக்கிறார்கள்.

இந்த மென்டல் ஹெல்த் என்பது அடுத்தக்கட்டத்திற்கு உலகம் முழுவதும் நகர்ந்து கொண்டிருக்கக்கூடிய சூழலில் அதிகப்பேர் ஜாதி வித்தியாசங்கள், ஆண் பெண் என்று வரக்கூடிய ஏற்ற தாழ்வுகள் என அனைத்துமே மனநிலையை பாதிக்ககூடிய விசயங்களாக மாறிக்கொண்டிருக்கிறது. இதை மென்டல் ஹெல்த் என்பார்கள். இது அனைவருக்கும் வரக்கூடிய பிரச்சனையாக எல்லோருக்கும் மான ஒன்று என்பதை நோக்கி நாம் நகர வேண்டும். அந்த நகர்வை இன்று முதல்கட்டமாக தூத்துக்குடியிலே மாற்றிருக்க கூடிய இந்த நிகழ்ச்சி, மிகப் பெரிய ஒரு நம்பிக்கையை தரக்கூடிய ஒரு நிகழ்வு இந்த மகிழ்வகம் இங்கு உருவாகுவதற்கு எல்லா உதவிகளையும் செய்து தந்திருக்ககூடிய நம்முடைய அமைச்சராக இருக்கட்டும், நம்முடைய மாவட்ட ஆட்சியர், மாநகர மேயர், மாநகராட்சி ஆணையாளர், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஆகியோருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என தூத்துக்குடி பாராமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், மேயர் பெ.ஜெகன், மாநகராட்சி ஆணையாளர் லி.மதுபாலன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி.ஆர்.ஐஸ்வர்யா,

முதல்வர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மரு. சிவக்குமார், உதவி இயக்குநர் தி பான்யன் நிறுவனம் செல்வி. கீர்த்தனா, நிறுவனர் ஆர் சோயா டிரஸ்ட் சரவணன்,

தி பான்யன் மருத்துவ இயக்குநர் மரு.சி.அன்பு துரை மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

தென்காசி, டிச.25

தென்காசிமாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் 27.12.2024 வெள்ளிக்கிழமை அன்று விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல் கிஷோர் தகவல் தெரிவித்துள்ளார்.

தென்காசி மாவட்டத்தில் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 27.12.2024 வெள்ளிக்கிழமை காலை 11:00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல் கிஷோர் தலைமையில் நடைபெற உள்ளது. விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் தென்




காசி மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து துறை அலுவலர்களும் பங்கேற்கிறார்கள்.

எனவே, அனைத்து வட்டார விவசாயிகளும் கலந்து கொள்வதோடு மனுவில் தங்களது கைபேசி எண்ணையும் குறிப்பிடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விவசாய குறைதீர் நாள் கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுவிற்கான ஒப்புகையும் மனுவின் கோரிக்கை தொடர்பான விபரங்களும் அனைத்து வகை கைபேசிகளிலும் பார்க்கும் வண்ணம் செயலி வாயிலாக குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். இக்குறைதீர் நாள் கூட்டத்தில் விவசாயம் தொடர்பான தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயனடையுமாறு தென்காசி மாவட்ட விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

## மதுரை மாநகராட்சி பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம்

மதுரை: டிச 25

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) அலுவலகத்தில் பொது மக்கள் குறைதீர்க்கும் முகாம் மேயர் இந்திராணி பொன்வசந்த் ஆணையாளர் ச.தினேஷ் குமார், இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் இன்று நடைபெற்றது.

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் சொத்து வரி திருத்தம் தொடர்பாக 20 மனுக்களும், சொத்துவரி பெயர் மாற்றம் வேண்டி 1 மனுவும், காலிமனை வரி மற்றும் புதிய வரிவிதிப்பு வேண்டி 3 மனுக்களும், பாதாள சாக்கடை இணைப்பு மற்றும் குடிநீர் குழாய் இணைப்பு தொடர்பாக



48 மனுக்களும், சுகாதாரம் தொடர்பாக 13 மனுக்களும், ஆக்கிரமிப்பு அகற்ற வேண்டி 1 மனுவும், இதர கோரிக்கைகள் தொடர்பாக 1 மனுவும் என மொத்தம் 87 மனுக்கள் பொது மக்களிடம் இருந்து மாண்புமிகு மேயர் அவர்களால் நேரடியாக பெறப்பட்டது. இன்று நடைபெற்ற முகாமில் சொத்துவரியில் பெயர் திருத்தம் செய்ய வேண்டி விண்ணப்பித்த மனுதாருக்கு உடனடியாக பெயர் திருத்தம் செய்து அதற்கான ஆணையினை மனுதாரருக்கு மேயர் வழங்கினார்.

இம்முகாமில் துணை மேயர் .தி.நாகராஜன், மண்டலத் தலைவர் . பாண்டிச்செல்வி, உதவி ஆணையாளர் பிரபாகரன், நகர்நல அலுவலர் மரு.இந்திரா, மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், உதவி வருவாய் அலுவலர் செந்தில்குமரன், கண்காணிப்பாளர் சுரேஷ்பாபு, செயற் பொறியாளர் சுந்தரராஜன், உதவி செயற் பொறியாளர் முத்து, உதவி பொறியாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## கண்ணங்குடி ஒன்றியம் திருப்பாக்கோட்டை கிராமத்தில் புகைப்படக் கண்காட்சி

சிவகங்கை, டிச.25

சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருப்பாக்கோட்டை கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழகத்தில் அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் இடம்



பெற்றன.

மேலும், இக்கண்காட்சியில் அரசு திட்டங்கள் குறித்தும், நலத்திட்டங்களை எவ்வாறு பெறுவது, யாரை அணுகி பெற வேண்டும் என்பது குறித் தும் பொதுமக்களுக்கு அலுவலர்களால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், நலத்திட்ட உதவிகளை யாரை அணுகிப் பெறவேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதியாக இப்புகைப்படக் கண்காட்சி பெரிதும் உதவியாக இருந்தது என பொதுமக்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்று, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் அரசின் சார்பில் நடத்தப்படும் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பார்த்து, அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டு பயன்பெறவேண்டும்.

## கல்லலில் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா

சிவகங்கை, டிச.25

சிவகங்கை மாவட்டம் கல்லலில் எழுத்தாளரும், கவிஞருமான மகா பிரபு வின் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா வரும் டிசம்பர் 29, ஞாயிற்றுக்கிழமை, காலை 930 மணியளவில் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் நடைபெற உள்ளது. ஏற்கனவே இவர் எழுதிய உறவுகள், மிஸ்டர் அவசரம், வயநாடு ஆகிய மூன்று நூல்கள் கடந்த ஆண்டு வெளியான நிலையில் தற்போது பட்டாசு (கவிதை), மகாராஜா (நுண் கதை), மனிதம் (கட்டுரை) ஆகிய மூன்று நூல்கள் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் செந்தில்நாதனால் வெளியிடப்பட உள்ளது. இதில் மனிதம் என்கிற நூல் 25 எழுத்தாளர்களால், வெவ்வேறு தலைப்புகளில் எழுதப்பட்ட ஒரு அனுபவ பகிர்வு நூலாகும். இது போன்ற உறவுகள் என்ற ஒரு தொகுப்பு நூலை கடந்த ஆண்டும் இவர் வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு நூல்கள் மூலம் தமிழ் இலக்கிய உலகிற்கு 45 புதிய எழுத்தாளர்கள் கிடைக்கப்பெற்றுள்ளனர்.






சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை முன்னிட்டு ஏழை எளிய மக்களுக்கு புத்தாடைகள் வழங்கி மகிழ்ந்தனர். பங்குத்தந்தை சேசு உதவிப் பங்குத்தந்தை பாஸ்டின் பாரதி தலைமை வகித்தனர். கிளை தலைவர் ஆரோக்கியசாமி நோக்கவுரையாற்றினார். மத்திய சபை தலைவர் பெர்னாட்ஷா சிறப்புரையாற்றினார்.

## சிவகங்கை மாவட்டம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க ஆட்சியர் அழைப்பு

சிவகங்கை டிச25

சிவகங்கை மாவட்டம் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

முறையாக பள்ளியில் பயின்று ஒன்பதாம் வகுப்பில் தேர்ச்சி பெற்று பத்தாம் வகுப்பில் தோல்வியுற்றவர்களுக்கு மாதம் ரூ.200/ம், 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.300/ம், பிளஸ் 2 தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.400/ம், பட்டதாரிகளுக்கு (ஙிணி போன்ற தொழில்சார் பட்டப்படிப்பு தவிர) மாதம் ரூ.600/ வீதம் 3 ஆண்டிற்கு வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை நேரடியாக மனுதார்களது வங்கி கணக்கில் காலாண்டுக்கொருமுறை வரவு வைக்கப்படும்.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் இளைஞர்கள் மாவட்ட



வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்களின் கல்வித்தகுதிகளை பதிவு செய்து 5 ஆண்டுகள் நிறைவு செய்திருக்க வேண்டும். தொடர்ந்து பதிவினை புதுப்பித்து இருக்க வேண்டும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் 45 வயதுக்கு மிகாமலும், ஏனையோர் 40 வயதுக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். மனுதாரரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000 (எழுபத்தி இரண் டாயிரத்திற்கு) மிகாமல் இருத்தல் வேண்டும். அன்றாடம் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பயிலும் மாணவ/மாணவியருக்கு இவ்வுதவித் தொகை வழங்கப்பட மாட்டாது. எனினும், தொலைதூரக் கல்வி அல்லது அஞ்சல் வழி மூலம் கல்வி கற்பவர்கள் உதவித் தொகை பெறலாம். ஏற்கனவே உதவித் தொகை பெற்று வருபவர்கள் தொடர்ந்து 3 வருடம் வரை உதவித் தொகை பெற நாளது தேதி வரை வங்கிகளில் குறிப்புகள் இடப்பட்ட வங்கிக்கணக்கு புத்தக நகலுடன் சுயஉறுதிமொழி ஆவணத்தையும் பூர்த்தி செய்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஒப்படைத்து தொடர்ந்து உதவித்தொகை பெற்றுகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. சுயஉறுதிமொழி ஆவணம் சமர்ப்பிக்காத பயனாளிகளுக்கு உதவித் தொகை நிறுத்தப்படும்.

மேலும், இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறுவதற்கு மாற்றுத்திறனாளிகளுக்கு வருமான உச்சவரம்பு கிடையாது.

இத்திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு 10 ஆண்டுகள் வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஓராண்டு நிறைவு பெற்ற மாற்றுத்திறனாளிகள் இந்த உதவித் தொகை பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம். பத்தாம் வகுப்பு மற்றும் அதற்கு கீழ் படித்தவர்களுக்கு மாதம் ரூ.600/வீதமும் பிளஸ் 2 கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.750/ம், பட்டதாரிகளுக்கு ரூ.1000/ம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், அரசின் வேறு உதவித்தொகை எதுவும் பெறுதல் கூடாது.

இந்த உதவித் தொகை பெறுவதற்கு மேற்காணும் தகுதிகள் உள்ளவர்கள் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு அனைத்துக் கல்விச் சான்றுகள், வேலைவாய்ப்பு அடையாள அட்டை ஆகியவற்றுடன் நேரில் வந்து இலவசமாக விண்ணப்பம் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் அனைத்து வேலை நாட்களிலும் வருடம் முழுவதும் வழங்கப்படும். மேலும் உதவித் தொகை பெறுபவர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவுரத்து செய்யப்பட மாட்டாது எனவும் உதவித்தொகை பெறுவதால் வேலைவாய்ப்பு பரிந்துரைத்தலுக்கு எவ்வித தடையும் ஏற்படாது.

எனவே, இத்திட்டத்தின் கீழ் இதுவரை உதவித் தொகை பெறாத தகுதியான இளைஞர்கள் விண்ணப்பத்தினைப் பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பத்தை அலுவலகத்தில் வேலை நாட்களில் நேரில் சமர்ப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161